P.R. No. 345

# பத்திரிக்கைச் செய்திக் குறிப்பு

## 23.04.2010

இன்று உலகப் புத்தக தினத்தை முன்னிட்டு அரிய புத்தகங்களின் கண்காட்சியை கன்னிமாரா பொது நூலகத்தில் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் **திரு.தங்கம் தென்னரசு** அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும் கன்னிமாரா பொது நூலகம் மற்றும் 31 மாவட்ட மைய நூலகங்களை இணைக்கும் (Networking of Libraries) திட்டத்தின் முதல் நிகழ்வாகக் கன்னிமாரா பொது நூலக நூற்பட்டியல் இணைய வழி நூலக விவரணை வசதியுடன் இன்று இணைய தளத்தில் வெளியிடப்படுகின்றது. இதற்காக ரூ.1.50 கோடி செலவிடப்படுகின்றது. இச்சேவை www.pallikalvi.in என்ற பள்ளிக் கல்வித் துறையின் அதிகாரப்பூர்வ இணையதளத்தின் வாயிலாக அனைவருக்கும் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. இன்னும் ஒராண்டுக்குள் அனைத்து மாவட்ட மைய நூலகங்களும் இணையதளம் வாயிலாக ஒருங்கிணைக்கப்படும். குறிப்பாக மே மாத இறுதிக்குள் கோவை, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்கள் ஒருங்கிணைக்கப்படும்.

இந்நிகழ்வு நூலக செயல்பாடுகள் அனைத்தையும் கணினி மயமாக்குவதற்கான முதற்படியாகும். நூலக வாசகர்களுக்கு சேவை அளிப்பதற்காக குறுந்தகவல் குறியீட்டெண் (SMS Short Code) வழங்குவதற்கான கோரிக்கை அரசுக்கு விண்ணப்பிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. இவ்வெண் பெறப்பட்டதும் ஒரு வாசகர் நூலகத்திற்கு வராமலேயே நூல்கள் பெறுவதற்கான சேவை வழங்கப்படும்.

இந்நூலக ஒருங்கிணைப்பை மைய அரசின் தகவல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும், சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள NRC-FOSS (National Resource Centre for Free / Open Source Software) அமைப்பு செய்து வருகின்றது.

பொது நூலக நூற்பட்டியல் இணையதளத்தில் வெளியிடப்படும் இந்நிகழ்வு நூலக இயக்கதத்தின் ஒரு மைல் கல்லாகும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொது நூலக இயக்குநர்.